**OS.No**. 250/2017 உ/இ 470/2018

**DW**1 – கோவிந்தராஜ் த/பெ வெங்கடபதி

நாள். 27.03.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் சென்ற முறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வா.த.சா.ஆ.19 ன் கீழான பொது அறிவிப்பிற்கு 3 ம் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து 1 ம் வாதி வெளியேறிவிட்டதாகவும், 3 ம் பிரதிவாதி நிறுவனம் கலைக்கப்பட்டுவிட்டதாகவும் மறுப்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 2015 ல் வா.த.சா.ஆ.9 ன் கீழ் திருப்பூர் குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்தில் தனிப்புகார் அளித்தபோது 01.07.2011 கடிதத்தை பழனிச்சாமியும் கணேசனும் எங்கு வைத்து என்னிடம் கொடுத்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். தனிப்புகாரில் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், சொல்லியுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ.8 ஆனது பழனிசாமியும் கணேசனும் எனது மனைவியான 1ம் பிரதிவாதிக்கு கொடுத்த பிரமாண வாக்குமூலம் என்றால் ஆமாம். அதில் 1ம் வாதிக்கு ரூ.15,00,000/– பணம் கொடுத்ததாகவும், 1.7.2011 தேதிய கடிதத்தை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்ததாக கூறவில்லை என்றால் ஆமாம். வா.த.சா.ஆ.6 ல் மேற்படி பழனிசாமி மற்றும் கணேசனிடம் நான் ரூ.15,00,000/– பெற்றுக்கொண்டுள்ள விவரத்தை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் அதில் உள்ள கையெழுத்தை மட்டும் ஒப்புக்கொண்டுள்ளேன். சங்கதிகள் மாற்றப்பட்டுள்ளதாக ஏற்கனவே தெரிவித்துள்ளேன். 2013–14 க்கான வருமான வரி அறிக்கையில் 3 ம் பிரதிவாதி நிறுவனம் பழனிச்சாமி மற்றும் கணேசனுக்கு ரூ.15,00,000/–த்தை திருப்பி கொடுத்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. 2013–14 க்கான வருமான வரி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் 3 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான உண்மை நிலை தெரிய வந்துவிடும் என்பதால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. பவானி அம்மாபேட்டையில் கம்பெனியில் சூபர்வைசராக வேலை பார்த்தபோது பழனிசாமி மற்றும் கணேசன் மேற்படி கம்பெனியில் வேலை பார்த்ததாக

சொல்லியுள்ளேன், அந்த சமயத்தில் வேல்முருகன் மற்றும்கண்ணன் என்பவர்களும் வேலை பார்த்தார்கள் என்றால் இல்லை. நீங்கள் குறிப்பிடும் வேல்முருகன் யார் என்பது தெரியவில்லை. 1.7.2011 கடிதத்தில் மேற்படி வேல்முருகன் கண்ணன் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால்ஆமாம். மேற்படி கடிதத்தில்அவர்களுடைய தகப்பனார் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். கம்பெனியில் வேலை பார்த்தபோது வெளிமாநிலங்களுக்கும் மெசின் சர்வீசிற்காக சென்றதாக சொல்லியுள்ளேன். அவ்வாறு செல்வதற்கு என்னுடைய உரிமையாளர் பிறப்பித்த எழுத்து மூலமான உத்தரவோ கடிதமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் செல்வக்குமார் என்ன வேலை பார்த்தார் என்றால் சூபர்வைசராக வேலை பார்த்து வந்தார். 28.12.2013 ல் ரூ. 20,000/-மும் 8.1.2014 ல் ரூ.50,000/-மும் செல்வகுமார் 3ம் பிரதிவாதி கணக்கில் இருந்து டிராப் செய்துள்ளார் என்றால் ஆமாம். பி.த.சா.ஆ.8 ன் கீழ் எனது மனைவியும் பழனிச்சாமி மற்றும் கணேசனும் தாக்கல் செயத் நிருபண வாக்குமூலத்தில் 1,2 வாதிகள் 3ம் பிரதிவாதி கணக்கில் ரூ.3 கோடிக்கு மேல் மோசடி செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி அவதூரான புகாரினால் வாதிகளுக்கு சமுதாயத்தில் ஓடி ஒளிய வேண்டிய அவதூரான நிலை ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா லட்சுமி நகர் கிளையில் 3ம் பிரதிவாதி பெயரில் 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 18.2.2008 ல் கூட்டாக வங்கி கணக்கு ஆரம்பித்துள்ளார்கள் என்றால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. எஸ்பிஐ லட்சுமி நகர் கிளையில் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட கணக்கு எண்.30330861007. என்றால் ஆமாம். எங்களுக்கு தெரியாமல் ஆரம்பித்தார்கள். அந்த கணக்கு 5.8.2021 ல் முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை.

3. மேற்படி வங்கி கணக்கில் 12.3.2012 க்கு பிறகு எந்த வங்கி வரவு செலவும் நடைபெறவில்லை என்று மேலாளர் கடிதம் கொடுத்துள்ளார் என்றால் வாதி பெற்று தாக்கல் செய்துள்ளார். ஒரு வங்கி கணக்கை பொதுவாக ஆரம்பிப்பதாக இருந்தால் கணக்கை ஆரம்பிப்பவர்கள் அனைவரும் நேரில் சென்றுதான் வங்கியில் கையெழுத்திடவேண்டும் என்றால் அந்த சமயத்தில் அவ்வாறில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாணப் பத்திரிகையிலேயே 1ம் வாதியும், 1ம்

பிரதிவாதியும் சேர்ந்து கூட்டாக வங்கி கணக்கை ஆரம்பித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அக்கவுண்ட் ஸ்டேட்மென்ட் கிடைத்தபிறகு வங்கியில் சென்று பார்த்தபோது வங்கி கணக்கு ஆரம்பித்த விவரம் தெரியவந்தது. நான் தனிப்புகார் அளித்தபிறது போலீசார் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் இல்லை. எங்களைத்தான் காவல் நிலையத்திற்கு வரவழைத்தார்கள். மேற்படி விசாரணைக்கு 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் பொது நாட்குறிப்பேட்டை கொண்டு சென்றேனா என்றால் ஆமாம். அவ்வாறு நான் கணக்கு புத்தகங்களை கொண்டு சென்ற சமயத்தில்அங்கு 1ம் வாதியோ 2ம் வாதியோ இல்லை என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் கணக்கு புத்தகங்கள் என்னுடைய பொறுப்பில் இருந்ததால்தான் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றேன் என்றால் நிறுவனத்தில் இருந்தது. கொண்டு சென்றேன். மேற்படி கணக்கு வழக்குகள் நிறுவனத்திலேயே உள்ளதால்அசல் வழக்கு எண்.470/2018ல் 2007 முதல் 2013 வரைக்கான கணக்கு வழக்குகளை ஒப்படைக்கக் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2007 முதல் 2018 வரைக்கான 1,2 வாதிகளின் தனி நபர் கணக்கினை கோருவதற்கு எனக்குஎந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் ஏற்கெனவே 2009 முதல் 2013 வரைக்கான வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் அதனை கோருவதற்கு எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.9 ன் கீழான புகாரிற்கு முன்ஜாமின் கோரி 1,2 வாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைமனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டது என்றால் 2ம் வாதிக்கு கிடைக்கவில்லை. 1ம் வாதிக்கு வழ்ங்கப்பட்ட பிணையை ரத்து செய்ய வேண்டி நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைமனு எண்.196/2016ஐ தாக்கல் செய்திருந்தேன் என்றால் ஆமாம். மேற்படி மனுவில் 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் உற்பத்திஆகும் துணிகளில் 30 சதவீதம் ஸ்க்ராப் வரும் என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கான 2013–14ம் ஆண்டிற்கான அறிக்கையில் 30 சதவீத ஸ்க்ராபிற்கான மதிப்பை காட்டியுள்ளேனா என்றால் அந்த வருடத்தில் ஸ்க்ராப் எடுக்கவில்லை. அதனால் காட்டவில்லை. மாண்பு மிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் 30 சதவீதம் ஸ்க்ராப் வரும் என சொல்லிவிட்டு தற்போது ஸ்க்ராப்

எடுக்கவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்டர் கொடுத்த கம்பெனிகள் ஸ்க்ராப் எடுக்கக்கூடாது என அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதனை 2ம் வாதியை நேரில் சென்று நிறுவனங்களுக்குஅறிவுறுத்தி உள்ளார். எந்தெந்த கம்பெனிக்கு ஆர்டர் எடுத்தோம் என்பதையும், அதில் உற்பத்தி எவ்வளவு என்பதையும் ஸ்க்ராப் எவ்வளவு என்பதையும் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். உற்பத்தி செய்யப்பட்ட பொருளை கம்பெனியிடம் ஒப்படைக்கும்போதுஆர்டர் கொடுத்த கம்பெனியுடன் ஒப்புகை பெறுவோம் என்றால்ஆமாம். ஸ்க்ராப் எடுக்கப்படவில்லை என்பதற்கும் ஒப்புகை பெற வேண்டும் என்றால் அவர்கள் அவ்வாறு கேட்பதில்லை. ஸ்க்ராப் ஐட்டம் குறித்து ஆர்டர் கொடுத்த நிறுவனத்திடம் ஒப்புகை பெறவில்லை என்றாலும் எனது தவறை மறைப்பதற்காக அவர்கள் கேட்பதில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. 8.1.2012 முதல் நான் சர்புதின் என்பவரிடம் ஸ்க்ராப்பை பெற்றுவிட்டு ரொக்கம் பெறுவேன் என்றால் 1ம் வாதிதான் பெறுவார். என்னை கையெழுத்து மட்டும் போடச்சொல்வார். அதனால் போட்டேன். 1ம் வாதி பெறுவார் என இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2ம் வாதியின் தகப்பனார் மறைவிற்கு பிறகு 1ம் வாதி அவரது கையெழுத்தை மோசடியாக உற்பத்தி செய்து ஆவணத்தை உருவாக்கியுள்ளதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள 19.5.2009 தேதியில் ஆர்சிக்காக ஒப்படைக்கப்பட்ட வாடகை ஒப்பந்தமும் எங்களால் உருவாக்கப்பட்ட வாடகை ஒப்பந்தமும் எங்களால்தான் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் 19.5.2009 தேதிய பதிவு சான்றிதழில் எனது மனைவியின் புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதனால் நான் 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் நம்பிக்கை மோசடியும் குளறுபடியான நிர்வாகமும் செய்ததால்தான் அ.வ.எண்.250/2017 வழக்கில் வாதிகள் கோரியுள்ளபடி தீர்ப்பளிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

6. 2017ல் புளும் நிட் பினிசர்ஸ் என்ற பெயரில் நானும் என்னுடைய மனைவியும் சேர்ந்து ஆரம்பித்த கூட்டாண்மை நிறுவனத்திற்கான கணக்குகளை இன்று வரை வணிகவரித்துறைக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை ஆடிட்டரைத்தான் கேட்கவேண்டும்.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.